வணக்கம்

ஆகாஷ்வாணி-புதுச்சேரி

மாநிலச் செய்திகள்

வாசிப்பவர்—சரவண குமார்

தேதி 14.6.2025 நேரம் மாலை 6.10 மணி

---

தலைப்புச் செய்திகள்

குடியரசு துணைத் தலைவர் திரு ஜெகதீப் தன்கர் 3 நாள் அரசு முறைப் பயணமாக நாளை புதுச்சேரி வருகிறார்.

பிரதமர் திரு. நரேந்திர மோடி நாளை முதல் 5 நாள் சுற்றுப்பயணமாக சைப்ரஸ், கனடா, குரேஷியா ஆகிய நாடுகளுக்கு செல்கிறார்.

சர்வதேச யோகா தினம் வரும் 21-ஆம் தேதி கொண்டாடப்படுவதை ஒட்டி, நாடு முழுவதும் பல்வேறு விழிப்புணர்வு நிகழ்ச்சிகள் நடைபெற்று வருகின்றன.

கடந்த மே 4-ஆம் தேதி நடைபெற்ற எம்பிபிஎஸ், பிடிஎஸ் உள்ளிட்ட இளநிலை மருத்துவ படிப்புகளுக்கான நீட் நுழைவு தேர்வு முடிவுகள் இன்று வெளியிடப்பட்டன.

ஜெகதீப் தன்கர்

குடியரசு துணைத் தலைவரும் புதுச்சேரி பல்கலைக் கழக வேந்தருமான திரு ஜெகதீப் தன்கர் 3 நாள் அரசு முறைப் பயணமாக நாளை புதுச்சேரி வருகிறார். நாளை மறுநாள் திங்கட்கிழமை மாலை 4 மணி அளவில் ஜிப்மர் வளாகத்தில் நடைபெற உள்ள தேசத்தை **கட்டி எழுப்புவதில் சுற்றுச் சூழல் நிலைத் தன்மை** நிகழ்ச்சியில் தலைமை விருந்தினராக கலந்து கொண்டு உரையாற்றுகிறார். ஜிப்மர் இயக்குநர் டாக்டர் விஎஸ் நேகி-யின் வரவேற்பு உரைக்கு பின் நடைபெற உள்ள இவ்விழாவில் புதுச்சேரி துணை நிலை ஆளுநர் திரு கைலாஷ்நாதன், முதலமைச்சர் திரு ரங்கசாமி உள்ளிட்டோரும் உரையாற்ற உள்ளனர். சட்டப்பேரவைத் தலைவர் திரு செல்வம் முன்னிலை வகிக்கும் இந்நிகழ்வில் பாராளுமன்ற உறுப்பினர்கள் திரு செல்வ கணபதி, திரு வைத்திலிங்கம், மற்றும் சட்டமன்ற உறுப்பினர் திரு ஏகேடி ஆறுமுகம் உள்ளிட்டோர் கலந்து கொள்ள உள்ளனர். இதனைத் தொடர்ந்து வரும் 17-ஆம் தேதி காலை 10 மணி அளவில் புதுச்சேரி பல்கலைக்கழகத்தில் பேராசிரியர்கள் மற்றும் மாணவர்களுடன் கலந்துரையாட உள்ளார். திரு தன்கரின் புதுச்சேரி வருகையை ஒட்டி, விரிவான ஏற்பாடுகள், பலத்த பாதுகாப்பு ஏற்பாடுகளும் செய்யப்பட்டுள்ளன.

*மோடி-சுற்றுப் பயணம்*

பிரதமர் திரு. நரேந்திர மோடி நாளை முதல் 5 நாள் சுற்றுப்பயணமாக சைப்ரஸ், கனடா, குரேஷியா ஆகிய நாடுகளுக்கு செல்கிறார்.

பிரதமரின் பயணம் பற்றிய மேலும் சில விவரங்கள்

(வாய்ஸ்)

*மோடி-சுற்றுப் பயணம்*

(வாய்ஸ்)

சைப்ரஸ் அதிபர் திரு. நிக்கோஸ் கிறிஸ்டோ டவ்லி டஸ்-சின் அழைப்பை ஏற்று அங்கு செல்லும் பிரதமர், அந்நாட்டு அதிகாரிகள் மற்றும் வணிகத் தலைவர்களுடன் லிமசால் நகரின் பேச்சுவார்த்தை நடத்தவுள்ளார். பிரதமரின் இப்பயணம் இந்தியா சைப்ரஸ் நாடுகளுக்கு இடையிலான இருதரப்பு உறவை வலுப்படுத்தி ஐரோப்பிய யூனியன் உடனான நட்புறை முன்னெடுத்துச் செல்லும் என எதிர்பார்க்கப் படுகிறது.

பிரதமர் தமது பயணித்தின் 2-ஆவது கட்டமாக ஜூன் 16ஆம் தேதி கனடாவில் நடைபெறும் ஜி-7 உச்சி மாநாட்டில் பங்கேற்கும் அவர், எரிசக்தி, பாதுகாப்பு, தொழில்நுட்பம் மற்றும் புதுமை உள்ளிட்ட உலகளாவிய பிரச்சனைகள் குறிப்பாக செயற்கை நுண்ணறிவு, ஆற்றல் மற்றும் குவாண்டம் தொடர்பான பிரச்சனைகள் குறித்து ஜி-7 நாடுகளின் தலைவர்கள், மற்றும் பிற சர்வதேச தலைவர்களுடன் கருத்துக்களை பரிமாறிக் கொள்கிறார்.

*மோடி-சுற்றுப் பயணம்*

தொடர்ந்து தனது பயணத்தின் மூன்றாம் கட்டமாக வரும் 18-ஆம் தேதி திரு மோடி குரேஷியா செல்கிறார். இந்த பயணத்தின் முக்கியத் துவத்தை குறிக்கும் வகையில் குரேஷியா பிரதமர் ஆன்ட்ரஜ் பின்கோவிச்-சையும், அதிபர் சோரான் மிலனோவிச்-சையும் சந்தித்து இருதரப்பு பேச்ச வார்த்தைகள் மேற்கொள்கிறார்.

*ஜெய்சங்கர்*

வெளியுறவு அமைச்சர் டாக்டர் ஜெய்சங்கர் ஐரோப்பாவுடன், குறிப்பாக பிரான்சுடனான நல்லுறவு தொடர்ந்து மேம்பட்டு வருவதாக பிரான்சின் மார்ச்சேயில் நடந்த Raisina Mediterranean 2025-ல் கலந்து கொண்டு பேசுகையில் எடுத்துரைத்தார். அரசு முறைப் பயணமாக பிரான்ஸ் சென்றுள்ள வெளியுறவுத் துறை அமைச்சர், ஐரோப்பிய யூனியன் உடனான தடையற்ற வர்த்தக ஒப்பந்தம் நடப்பாண்டுக்குள் இறுதி செய்யப்படும் என்றும் தெரிவித்தார்.

*ஹர்தீப்*

வரும் மாதங்களுக்கு நாட்டில் போதுமான எரிசக்தி விநியோகம் இருப்பதாக மத்திய பெட்ரோலியம் மற்றும் இயற்கை எரிவாயு அமைச்சர் திரு. ஹர்தீப் சிங் பூரி தெரிவித்துள்ளார், நேற்று பெட்ரோலிய செயலாளர் மற்றும் இந்திய எரிசக்தி பொதுத்துறை நிறுவனங்களின் தலைவர்களுடன் மறு ஆய்வுக் கூட்டத்தை நடத்திய பின்னர் சமூக ஊடகப் பதிவில் அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார். பிரதமர் திரு. நரேந்திர மோடியின் துடிப்பான தலைமையின் கீழ் எரிசக்தியின் கொள்ளளவு, மலிவு விலை, நிலைத்தன்மை ஆகியவற்றில் இந்தியா சிறப்பாக செயல்படுவதாக தெரிவித்துள்ளார்.

*நிர்மலா சீதாராமன்*

மத்திய அரசு கடந்த 11 ஆண்டுகளாக மேற்கொண்டு வரும் நடவடிக்கைகள் காரணமாக நாட்டின் பொருளாதார அடிப்படை கட்டமைப்புகள் வலுவாக உள்ளது என்றும் நாடு விரைவான பொருளாதார வளர்ச்சி கண்டு வருவதாக மத்திய நிதியமைச்சர் திருமதி நிர்மலா சீதாராமன் தனது சமூக வலைதளப் பதிவில் தெரிவித்துள்ளார். மேலும் நிதித் துறையில் மேற்கொள்ளப்பட்ட சீர்திருத்த நடவடிக்கைகளே இதற்கு காரணம் என்றும் டிஜிட்டல் பண பரிவர்த்தனையில் இந்தியா முன்னணியில் உள்ளதாகவும் அவர் மேலும் குறிப்பிட்டுள்ளார்.

*ஏபி சிங்*

பஹல்காம் தீவிரவாத தாக்குதலைத் தொடர்ந்து ஆபரேஷன் சிந்தூர் துல்லிய ராணுவ நடவடிக்கை இந்திய விமானப் படையின் தன்னிகரற்ற வலிமையை பறை சாற்றுவதாக ஏர்-சீப் மார்ஷல் ஏபி சிங் தெரிவித்துள்ளார். ஐதராபாத் துண்டிகள் விமானப் படை பயிற்சி மையத்தில் ஒருங்கிணைந்த பயிற்சி நிறைவு அணி வகுப்பில் இன்று பங்கேற்ற அவர் நமது ராணுவம் ஒருங்கிணைந்த ஆற்றலை வெளிப்படுத்துவதாகவும் அவர் கூறினார்.

*யோகா*

சர்வதேச யோகா தினம் வரும் 21-ஆம் தேதி கொண்டாடப்படுவதை ஒட்டி, நாடு முழுவதும் பல்வேறு விழிப்புணர்வு நிகழ்ச்சிகள் நடைபெற்று வருகின்றன.

புதுடெல்லியில் யோகா தொடர்பான உலகளாவிய யோகா உச்சி மாநாடு இன்று நடைபெற்றது. இதில் கலந்து கொண்டு பேசிய ஆயுஷ் துறை அமைச்சர் திரு பிரதாப் ராவ் ஜாதவ் யோகா என்பது உலக அமைதிக்காக இந்தியாவில் இருந்து உலகிற்கு கிடைத்த பரிசு மற்றும் மரபு என்று கூறினார்.

மாநாடு குறித்த மேலும் சில தகவல்கள் ...............

(வாய்ஸ்)

*யோகா*

(வாய்ஸ்)

<u>யோகா, மதம், பாலினம், மற்றும் மொழி ஆகியவற்றின் எல்லைகளைக் கடந்து குழந்தைகள் முதல் முதியவர்கள் வரை, ஏழைகள், வசதி படைத்தவர்கள் என அனைவராலும் அணுக கூடியது என்றும் அமைச்சர் தெரிவித்தார். கடந்த 10 ஆண்டுகளில் 33 சதவிகித தனிநபர்கள் சர்வதேச யோகா தின நிகழ்வில் பங்கேற்றுள்ளனர் என்றும் அவர் சுட்டிக்காட்டினார். இந்த யோகா இணைப்பு உச்சி மாநாட்டில் கலாச்சாரம் மற்றும் சுற்றுலாத் துறை அமைச்சர் திரு கெஜேந்திர சிங் ஷெகாவத் யோகா குரு ராம்தேவ் மற்றும் பிற முக்கிய பிரமுகர்களும் கலந்து கொண்டனர். ஒருங்கிணைந்த யோகா மற்றும் நல்வாழ்வு குறித்த கருத்துக்களை பரிமாறிக் கொள்ளும் தளமாக செயல்படுவதை, நோக்கமாகக் கொண்ட இம்மாநாட்டில் உலகளாவிய</u>

யோகா பயிற்சியாளர்கள், ஆய்வாளர்கள், கொள்கை வகுப்பாளர்கள், சுகாதார நிபுணர்கள் உள்ளிட்டோர் காணொளி வாயிலாகவும், பங்கேற்றனர்.

*இரத்த கொடையாளர் தினம்*

இரத்த கொடையாளர் தினம் இன்று கடைபிடிக்கப்படுகிறது. **இரத்தம் கொடுங்கள் – நம்பிக்கை கொடுங்கள் – ஒன்றிணைந்து உயிர்களை காப்போம் என்ற இந்த** ஆண்டுக்கான கருப் பொருளுடன் பல்வேறு விழிப்புணர்வு நிகழ்ச்சிகள் நடைபெறுகின்றன. பொது மக்களிடையே விழிப்புணர்வை ஏற்படுத்துவதற்கும், தன்னார்வ இரத்த தானத்தை ஊக்குவிப்பதற்கும் பல்வேறு போட்டிகளை புதுச்சேரி ஜிப்மர் ரத்த பரிமாற்ற மருத்துவ துறையும் புதுச்சேரி எய்ட்ஸ் கட்டுப்பாட்டுச் சங்கமும் இணைந்து ஏற்பாடு செய்திருந்த இந்த விழிப்புணர்வு நிகழ்ச்சியின் போது வெற்றி பெற்ற பொது மக்கள் கல்லூரி மற்றும் பள்ளி மாணவர்களுக்கு மகப்பேரியல் மற்றும் மகளிர் மருத்துவ துறை பேராசிரியர் டாக்டர் லதா சதுர்வேதுலா, தலைமை விருந்தினராக கலந்து கொண்டு பரிசுகளை வழங்கினார். நிகழ்ச்சியில் ரத்த பரிமாற்ற மருத்துவர்கள், கூடுதல் பேராசிரியர் மற்றும் துறைத் தலைவர் டாக்டர் ராஜேந்திர குல்கர்னி மற்றும் மருத்துவர்கள், அதிகாரிகள், ஊழியர்கள் உள்ளிட்டோர் கலந்து கொண்டனர்.

*விமான விபத்து*

தற்போது இந்திய விமானப் படையில் உள்ள 34 போயிங் 787 விமானங்களின் கண்காணிப்பை நீட்டிக்குமாறு சிவில் விமான போக்குவரத்து இயக்குநரகம் உத்தரவிட்டுள்ளதாக அத்துறையின் அமைச்சர் திரு ராம்மோகன் நாயுடு தெரிவித்தார். 8 விமானங்கள் ஏற்கனவே பரிசோதிக்கப்பட்டுள்ளதாகவும் அவர் கூறினார்.

முன்னதாக அகமதாபாத் ஏர்-இண்டியா விமான விபத்தில் உயிர் இழந்தவர்களின் எண்ணிக்கை 254-ஆக அதிகரித்துள்ள நிலையில் மத்திய உள்துறை இணை அமைச்சர் திரு ஹர்ஷ் சங்வி காந்தி நகரில் நடைபெறும் மரபணு பரிசோதனை நடைமுறைகளை இன்று ஆய்வு செய்தார். பின்னர் தடயவியல் நிபுணர்களுடன் அவர் ஆலோசனை மேற்கொண்டார். குஜராத்தில் உள்ள 36 தடவியல் நிபுணர்கள் டிஎன்ஏ பரிசோதனைகளை மேற்கொண்டு வருவதாகவும் இவர்களுக்கு உதவும் வகையில் மத்திய அரசும் தடயவியல் வல்லுனர் குழுவை அனுப்பி வைத்துள்ளதாகவும் அமைச்சர் கூறினார்.

*விமான விபத்து*

இந்த சம்பவம் குறித்து ஆராய பல்வேறு துறைகளைச் சேர்ந்த நிபுணர்களைக் கொண்ட உயர்மட்டக் குழு ஒன்று அமைக்கப்பட்டுள்ளதாக திரு ராம் மோகன் நாயுடு புதுடெல்லியில் செய்தியாளர்களிடையே கூறினார். இந்தக் குழுவின் தலைவராக உள்துறை செயலர் இருப்பார் என்றும் அவர் தெரிவித்தார். விமானத்தின் கருப்பு பெட்டி மீட்கப் பட்டுள்ளதாகவும் இது விபத்தின் போது அல்லது விபத்திற்கு சில நிமிடங்களுக்கு முன்பு உண்மையில் என்ன நடந்தது என்பது பற்றிய தகவல்களை வழங்கும் என்றும் மேலும் அவர் கூறினார்.

*நீட் ரிசல்ட்*

கடந்த மே 4-ஆம் தேதி நடைபெற்ற எம்பிபிஎஸ், பிடிஎஸ் உள்ளிட்ட இளநிலை மருத்துவ படிப்புகளுக்கான நீட் நுழைவு தேர்வு முடிவுகள் இன்று வெளியிடப்பட்டன. இத்தேர்வினை நாடு முழுவதும் 552 நகரங்களிலும், வெளிநாடுகளில் 14 நகரங்களிலும் அமைந்த 5 ஆயிரத்து 468 மையங்களில் 22 லட்சத்திற்கும் மேற்பட்ட மாணவர்கள் எழுதி இருந்தனர். இத்தேர்வில் ராஜஸ்தானைச் சேர்ந்த மகேஷ்குமார் முதலிடத்தையும், மத்திய பிரதேசத்தைச் சேர்ந்த உத்கர்ஷ் அவதியா மற்றும் மகாராஷ்டிராவைச் சேர்ந்த கிஷாந்த் ஜோஷி முறையே 2-ஆவது மற்றும் 3-ஆவது இடத்தை பிடித்துள்ளனர். மாணவர்கள் மதிப்பெண் அட்டைகளை ntaneet.nic.in என்ற தேர்வின் அதிகாரப் பூர்வ வலைதளத்தில் இருந்து பதிவிறக்கம் செய்து கொள்ளலாம்.

*வானிலை*

தென்னிந்திய பகுதிகளின் மேல் ஒரு வளிமண்டல மேலடுக்கு சுழற்சி நிலவுகிறது. இதன் காரணமாக புதுச்சேரி, காரைக்கால், மற்றும் தமிழகத்தில் ஒரு சில இடங்களிலும் பலத்த தரைகாற்று மணிக்கு 40 முதல் 50 கிலோமீட்டர் வேகத்தில் வீசக் கூடும் என்றும் இடி மின்னலுடன் கூடிய லேசானது முதல் மிதமான மழை பெய்யக் கூடும் என்றும் சென்னை வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது. நீலகிரி மாவட்டத்தில் ஓரிரு இடங்களில் கன முதல் அதிகன மழை பெய்யக் கூடும் என்றும் கோயம்புத்தூர் மற்றும் திருநெல்வேலி மாவட்டங்களின் மலைப் பகுதிகளில் ஓரிரு இடங்களில் கனமழை பெய்யக் கூடும் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

*விளையாட்டு*

தாய்லாந்தில் நடைபெற்ற ஆசிய பாரா படகு சாம்பியன் போட்டியில் இந்தியா 2 தங்கம். 4 வெள்ளி, 4 வெண்கலப் பதக்கங்களை வென்றது.

*தீ விபத்து*

கொச்சி துறைமுகம் அருகே பெரும் தீவிபத்தில் சிக்கிய எம் பி வான் ஹை-503 கப்பலை இந்திய கடற்படை மீட்பு பணிகளில் ஈடுபட்டுள்ளது. சவாலான வானிலை, கடல் நிலைமைகள் மற்றும் தீவிபத்துக்களுக்கு இடையே மீட்புக் குழு கப்பல் டக்-ஆப் ஷோர் வாரியாருடன் இழுவையை இணைத்து கப்பலை இழுத்துச் செல்லும் பணி மேற்கொள்ளப்பட்டுள்ளது. இந்த மீட்பு பணியில் இந்திய கடற்படையின் ஐஎன்எஸ்-ஷர்தா மற்றும் ஓஎஸ்வி – எம்வி – டிரைட்டான் லிபர்டி ஆகியவை பயன்படுத்தப்படுகின்றன.

மீண்டும் தலைப்புச் செய்திகள்

குடியரசு துணைத் தலைவர் திரு ஜெகதீப் தன்கர் 3 நாள் அரசு முறைப் பயணமாக நாளை புதுச்சேரி வருகிறார்.

பிரதமர் திரு. நரேந்திர மோடி நாளை முதல் 5 நாள் சுற்றுப்பயணமாக சைப்ரஸ், கனடா, குரேஷியா ஆகிய நாடுகளுக்கு செல்கிறார்.

சர்வதேச யோகா தினம் வரும் 21-ஆம் தேதி கொண்டாடப்படுவதை ஒட்டி, நாடு முழுவதும் பல்வேறு விழிப்புணர்வு நிகழ்ச்சிகள் நடைபெற்று வருகின்றன. கடந்த மே 4-ஆம் தேதி நடைபெற்ற எம்பிபிஎஸ், பிடிஎஸ் உள்ளிட்ட இளநிலை மருத்துவ படிப்புகளுக்கான நீட் நுழைவு தேர்வு முடிவுகள் இன்று வெளியிடப்பட்டன.

இத்துடன் இந்த செய்தி அறிக்கை நிறைவு பெறுகிறது.

Puducherry/Reg.Bulletin/Tamil/18.10hrs/14.6.2025/Script.

-----------------------------------------------

சிக்கிம்மில் கைலாஷ் மானசரோவர் யாத்திரைக்கான முதல் தொகுதி யாத்திரிகர்கள் நாளை காங்டாக் வருவதை முன்னிட்டு அவர்களை வரவேற்க சிக்கிம் அரசு அனைத்து ஏற்பாடுகளையும் செய்துள்ளது. 5 வருட இடைவேளைக்கு பிறகு இந்த மாதம் 20-ஆம் தேதி கைலாஷ் மானசரோவர் யாத்திரை தொடங்க உள்ளது.